r ஓம் ஸ்ரீயை நமஹ அஷ்டாங்கம்

ஓம் ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவரின் வாக்கமிர்தம் **ஏப்ரல்** -1973


ஸ்ரீ ப்ரமாதீச வருஷம் ஸ்ரீ பெரியவாள் எனக்கிட்ட ஆக்ஞை;- 'எப்படி உலகில் சந்திர சூர்யர்களை வைத்து கணனம் செய்து திதி ,வார, நக்ஷத்திர,யோக,கரணம் என்ற ஐந்துஅங்கங்களோடு கூடிய பஞ்சாங்கம் உபயோகப்படுத்துகிறோமோ, அதேபோல் தேவி(ஸ்ரீவித்யா)வழிபாடு செய்வதில் மிகஉயர்ந்த,அம்பிகையுடன் நேரே ஸல்லாபித்த மஹான்- ஸ்ரீ பாஸுரானந்தநாதர் என்று பிரஸித்தபெற்ற ஸ்ரீ பாஸ்கரராயர்-அவர் ஸ்ரீ பரசுராமகல்ப ஸூத்ரத்தின் விளக்க உரையில் இந்த தேவீமான- அஷ்டாங்க கணனம் சொல்லி-அதை உபயோகிக்கும் முறையையும்- கூறியுள்ளார். எட்டு அங்கங்களாவன-தத்வ மஹாகல்பம், தத்வ கல்பம், தத்வ மஹாயுகம், தத்வ யுகம், தத்வ பரிவிருத்தி (1) தத்வ வருடம்(2)ருது (3)நித்யாமாதம்(4)திதிநித்யா(5)தினநித்யா(6) தத்வதிவஸம் (7) வாஸரம் (8) உதயகடிகா என்பன. இதை நம் மடத்தில் தினம் பூஜை சங்கல்பத்தில் சொல்லி வருகிறோம்.'- முன்பு ஆந்திராவிலிருந்து ஒரு பெரியவர் பிரதி சாந்திரமான வருட ஆரம்பமுதல் ஒரு வருடத்திற்குக் கணக்கிட்டு நோட்டுப்புஸ்தகத்தில் எழுதிக்கொடுத்து தெலுங்குவருடப்- பிறப்பன்று பஞ்சாங்க படனம் அஷ்டாங்க படனமும் செய்துவிட்டுப் போவார்.ஸ்ரீ பெரியவா என்னை அவரிடம் கேட்டறிந்து நீ தொடர்ந்து- செய் என உத்தரவிட்டார். அது முதல் கையால் எழுதிக்கொண்டு வந்து இப்பொழுது கம்ப்யூட்டர் மூலமாக பல விஷயங்கள் சேர்த்துப்போட சௌகரியமாக உள்ளது. இந்த ஸர்வதாரி-ஆவணிமீ-12ம் தேதி (இது 144- வருடத்திற்கு ஒரு முறை மாத்திரம்வரும்)27. 08. 2008- அஷ்டாங்க எட்டு அங்கங்களின் முதல் அக்ஷரம் (அம்)பரஸ்பரம் சேர்வதால் 10 யோகங்கள் ஏற்படுவதை , மந்திர சாஸ்த்ரம் மஹாபுண்யகாலமாக கூறியுள்ளது . இந்த யோகங்கள் ஏற்படும் முறை-அவைகளின் பெயர்களுடன் அஷ்டாங்க4வது பக்கத்தில் கொடுக்கப்பட்டுஉள்ளது.அன்று அனைவரும்-சாக்தர்களும்ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தரியை ஜப பூஜாஹோமங்களால் வழிபட்டுப்பேரானந்தம் அடைவோமாக.

ஸ்ரீ தினகர சர்மா, கும்பகோணம்.போன்0435-2420898

**ॐ**

**ॐ जय जय शङ्कर हर हर शङ्कर ॥**

**OM JAYA JAYA SANKARA HARA HARA SANKARA**



**॥ इदं अष्टाङ्गम् श्रीमत् आचार्य चरणारविन्देषु समर्पणम् ॥**